# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## புதுச்சேரியில் இன்று தொடங்குகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், மூன்றாம் கட்ட பரப்புரையை இன்று (ஏப்ரல் 6-ஆம் தேதி) புதுச்சேரியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்றாம் கட்டமாக புதுச்சேரியில் பரப்புரையை தொடங்குகிறார்.



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **06.04.2026 (திங்கட்கிழமை)** | | |
| மாலை 5 மணி | புதுச்சேரி | புதுச்சேரி மாநிலம் |
| **07.04.2026 (செவ்வாய்க் கிழமை)** | | |
| காலை 9 மணி | கடலூர் (பொதுக்கூட்டம்) | திட்டக்குடி, விருத்தாசலம், குறிஞ்சிப்பாடி, பண்ருட்டி, கடலூர், நெய்வேலி, புவனகிரி, காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் |
| மாலை 5 மணி | நாகப்பட்டினம் (பொதுக்கூட்டம்) | நாகப்பட்டினம், கீழ்வேளூர், வேதாரண்யம் |
| **08.04.2026 (புதன் கிழமை)** | | |
| காலை 9 மணி | சீர்காழி (பொதுக்கூட்டம்) | மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் |
| மாலை 5 மணி | விழுப்புரம் (பொதுக்கூட்டம்) | திண்டிவனம், வானூர், விழுப்புரம், விக்கிரவாண்டி, திருக்கோவிலூர், செஞ்சி, மயிலம் |
| **09.04.2026 (வியாழக் கிழமை)** | | |
| காலை 9 மணி | திருவண்ணாமலை (பொதுக்கூட்டம்) | உளுந்தூர்ப்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி, செங்கம், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி |
| மாலை 5 மணி | மறைமலைநகர் (பொதுக்கூட்டம்) | செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம், பல்லாவரம் |

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்” சென்னை - 18
நாள் : 04.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



திருவண்ணாமலையில் 3வது நாளாக மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணியின் கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு வீதி, வீதியாக வாக்குசேகரித்தனர். உடன் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியாவிஜயரங்கன், கே.குணசேகரன், சீனி.கார்த்திகேயன், வி.எம்.நேரு, எம்.சிவக்குமார், இரா.திருமலை, ஐ.எம்.சுலைமான் கான், ச.நியூட்டன், நாசர் உசேன், இரா.அருள்உட்படபலர் உள்ளனர்.




மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் காங்கிரஸ் கமிட்டி குழு துணை தலைவர் ஏ.பி.சி.வி. சண்முகம், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், நகர மன்ற தலைவர்கள் காயல்பட்டினம் முத்து முகம்மது, திருச்செந்தூர் சிவா ஆனந்தி ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் நவீன் குமார், ஏ.பி. ரமேஷ், சதீஷ்குமார், இளையராஜா, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.